சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 10/2021

பெயர் திரு. முருகன் நாள். 18.07.2025
த/பெ.

**<u>வாதி சாட்சி 2 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. பூங்காவனம், சிவகுமார் மற்றும் ஆனந்தன் ஆகியோர் தவளகிரி என்பவர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளனர். எதற்கான வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 3 ஏக்கரில் 69 சென்ட் மட்டும் கிரயம் கொடுத்துவிட்டு மீதியை கொடுக்கவில்லை என்பதால் வழக்கு தாக்கல் செய்துள்ளனர். மேற்கண்ட கிரயம் பாலகிருஷ்ணன், தவளகிரிக்கு கொடுத்த கிரயம் ஆகும். தேதி சரவர ஞாபகம் இல்லை. அவ்வாறு கிரயம் கொடுத்த சுமார் 15 வருடங்கள் இருக்கும். அந்த கிரயம் சுமார் 10 வருடங்களுக்கு முன்பு தெரியவந்தது. அந்த கிரயத்தின் புல எண்.287பி/20. அந்த கிரயம் பற்றி என் தகப்பனார் கூறினார். எனக்கும் தெரியும். எனக்கு எவ்வாறு தனிப்பட்ட முறையில் தெரியும் என்றால் வாதிகள் எனக்கு பங்காளிகள் என்பதால் தெரியும். வாதிகளின் தகப்பனார் எனக்கு சித்தப்பா உறவு முறை. வாதிகளின் தகப்பனார் உயிருடன் இருக்கும்பொழுதே பிரதிவாதிகளுக்கு கிரயம் கொடுத்த விவரம் எனக்கு தெரியும். அந்த கிரய ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் போடவில்லை.

2) என் தகப்பனார் இறந்து 3 வருடங்கள் ஆகின்றன. என் தகப்பனார் பங்காளிகளிடம் இருந்து சொத்தை கிரயம் வாங்கும்பொழுது அந்த விவரத்தை என்னிடம் கூறினார். நாங்கள் 1980ல் அவ்வாறு கிரயம் பெற்றோம். பாலகிருஷ்ணன் தன் வாழ்நாளில் பிரதிவாதிகளின் மீது வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் அவ்வாறு வழக்கு ஏதும் தாக்கல் செய்யவில்லை. 1ம் பிரதிவாதி கிரயம்

வாங்கியது சரி என்றும், அவர்தான் வழக்குச் சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றும், பாலகிருஷ்ணன் தன் வாழ்நாளில் வழக்கு ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் அப்பொழுது தாக்கல் செய்யவில்லை. பாலகிருஷ்ணன் 19.10.2006 இறந்துவிட்டார் என்றால் சரிதான். வழக்குச் சொத்துக்களுக்கான பட்டாவை நான் பார்த்துள்ளேன். அது எல்லப்பன் பெயரில் உள்ளது. பட்டா எண் எனக்கு ஞாபகம் இல்லை. வழக்குச் சொத்திற்கான பட்டா 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்றாலும், அது எல்லப்பன் பெயரில் உள்ளதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் நான் பட்டாவை பார்த்திருந்தால் 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளது தெரியவரும் என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தைப் பொறுத்து உள்ள கிரயம் மற்றும் பாகப்பிரிவினை ஆவணங்கள் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், வாதிகள் எனக்கு உறவினர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாடச்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதிகள் வழக்குச் சொத்தை அனுபவம் செய்தது கிடையாது என்றாலும், நான் முதல் விசாரணையில் அனுபவம் செய்து வருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வழக்குச் சொத்தை கிரயம் வா'ங்கிய தேதி முதல் 1ம் பிரதவிாதி தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. காலம் கடந்து தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.